சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி

வழக்கு எண். எம்.சி.ஓ.பி. 70/2021

PW 1 காளிமுத்து 14.06.2024

<u>சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

விபத்து நடந்த தேதி 16.09.2020 என்றால் சரிதான். நான் பயணம் செய்த வாகனம் எனது சொந்த வாகனம் என்றால் சரிதான். எனது வாகனத்தை 4ம் எதிர்மனுதாரர் ராயல் சுந்தரம் ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனியில் காப்பீடு செய்துள்ளேன் என்றால் சரிதான். விபத்தானது கடலூரிலிருந்து சிதம்பரம் செல்லக்கூடிய புறவழிச்சாலையில் ஏற்பட்டது என்றால் சரிதான். விபத்து சமயத்தில் நான்தான் நிலைதடுமாறி 1ம் எதிர்மனுதாரர் ஓட்டிவந்த கார் மீது மோதி விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. கோவை கங்கா மருத்துவமனையில் எனது காயத்துக்கு சிகிச்சை பெற்றேன் என்றால் சரிதான். இரண்டு நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றேன் என்றால் 5 நாட்கள் சிகிச்சை பெற்றேன். சிகிச்சை பெற்ற பிறகும் நான் முன்பு பார்த்து வந்த பதவியை தற்போதும் பார்த்து வருகிறேன் என்றால் சரிதான். எனக்கு விபத்தினால் வருமான இழப்பு எதுவும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. 3 மாதம் சம்பளம் கொடுக்காதது குறித்தும் எனக்கு பணி உயர்வு வழங்காதது சம்பந்தமாகவும் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் வழக்குக்காக 3 மாதம்

சம்பளமும், பதவி உயர்வும் கிடைக்கவில்லை என அதிக நஷ்டஈடு பெறவேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்து என் அஜாக்கிரதையால் நடந்ததால் 3ம் எதிர்மனுதாரர் எனக்கு நஷ்டஈடு கொடுக்க வேண்டிய கடப்பாடு இல்லை என்றால் சரியல்ல. 3ம் எதிர்மனுதாரருக்கு எதிராக மனு தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்றால் சரியல்ல.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

வாய்ப்பளித்தும் இல்லை

**4ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

1ம் எதிர்மனுதாரர் TN 49 BL 1314 காரை அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து எனது ஸ்விப்ட் காரில் மோதி விபத்தை ஏற்படுத்திவிட்டார் என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரருக்கு எதிராகத்தான் முதல் தகவல் அறிக்கையும் குற்ற இறுதி அறிக்கையும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரர்தான் விபத்துக்கு முழுமையான காரணம் என்பதால் எனக்கு 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள்தான் நஷ்டஈடு செலுத்த வேண்டுமென்றால் சரிதான். என் மீது

தவறு ஏதும் இல்லை என்பதால் 4ம் எதிர்மனுதாரரிடம் நான் பரிகாரம் எதுவும் கோரவில்லை என்றால் சரிதான்.

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி
பொள்ளாச்சி